765

# KATHAI THIRATTU

## PART I

BY

C. SIVAGNANAM PILLAI

*Formerly Head Clerk, Offices of the District Educational Officers, Tanjore & Madras.*

OFFICE OF THE ... 6 MAY 1932

SCANNED

MADRAS:
...RASAWMY NAIDU & SONS
1932

[Price 3 As.

TB
O-,3(2)
N32
85396

# கதைத் திரட்டு

## (முதற் பகுதி)

தஞ்சை, சென்னை பாடசாலை இன்ஸ்பெக்டர்
ஆபீஸ்களில் ஹெட்கிளார்க்காக இருந்த

**தமிழறிஞர் - சே. சிவஞானம் பிள்ளை**

எழுதியது.

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
26 MAY 1932

சென்னை :
ஸி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்.
1932

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 3 அணா

85396

Printed at
The "Caxton Press,"
Madras.

2977

# முகவுரை

சிறுவர்களுக்கு ஆரம்பத்திலேயே கதைகளின் மூலமாய்க் கல்வி கற்பித்தலே மிகச்சிறந்த முறை என்பது ஆங்கில போதகாசிரியர்கள் பலருங் கொண்ட கருத்தாகும். அதனாலே ஆங்கில பாஷையில் ஈசாப் கதைகள் (Æsop'sFables) முதலிய எண்ணிறந்த கதைப் புத்தகங்கள் வெளிவந்து நிலவுகின்றன. நமது தமிழ் மொழியில் வெளிவந்துள்ள கதைப் புத்தகங்கள் மிகச் சிலவே என்பது அறிஞர் யாவரும் அறிந்ததே. தமிழில் வெளிவந்துள்ள கதைப் புத்தகங்களில் பல சிறுவர்கட்கு நீதியைப் போதிப்பன வாகவே இருக்கின்றன. ஆங்கில பாஷையில் காணப்படும் 'விநோதக் கதைகள்' போன்ற கதைகள் நமது தமிழ் மொழியில் மிகச் சிலவே. இந்தப் புத்தகத்தில் கீழ்வகுப்பில் வாசிக்கும் மாணவர்கள் தாமே வாசிக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் பற்பல விநோதக் கதைகள் தடித்த எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளன. இது முதற் புத்தகம். இன்னும் இரண்டு புத்தகங்களும் விரைவில் வெளிவரும். இவை சிறுவர்கட்கு மிகவும் பயன் படும்.

வெள்ளியம்பல விலாசம்
மயிலாப்பூர்
24 - 2 - 1932

சே. சிவஞானம்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | நரியும் ஓநாயும் | 1 |
| 2. | உணவும் சங்கீதமும் | 4 |
| 3. | நரியும் சேவலும் | 5 |
| 4. | அற்புதக் கிணறு | 8 |
| 5. | பூதமும் செம்படவனும் | 11 |
| 6. | பூதங்களை ஏமாற்றியது | 13 |
| 7. | உலர்ந்த சருகுகள் | 17 |
| 8. | அற்புத விளக்கு | 21 |
| 9. | சுண்டெலியும் குடியானவனும் | 24 |
| 10. | பட்சி ராஜன் | 29 |
| 11. | உபாத்தியாயரை ஏமாற்றிய குரங்கு | 30 |
| 12. | நரியின் தந்திரம் | 33 |
| 13. | ஆட்டுத்தோல் போர்த்த ஓநாய் | 36 |
| 14. | பாழடைந்த கோபுரம் | 38 |
| 15. | கர்வங்கொண்ட பூனை | 41 |

# கதைத் திரட்டு

## 1. நரியும் ஓநாயும்

ஒரு நரியும் ஒரு ஓநாயும் மிகவும் சிநேகமாக இருந்தன. அவை இரண்டும் இரை தேடும்படி வெளியே புறப்பட்டன. அவை போகும் வழியில் பெரிய வெல்லக்கட்டி ஒன்று வண்டியினின்றும் தவறித் தரையில் வீழ்ந்து கிடந்தது. அதைக் கண்டதும் ஓநாய், நரியைப் பார்த்து, 'நண்பனே நாம் இதைத் தின்று பசியாறலாம்' என்று சொல்லிற்று.

2. நரி, 'நாம், யாவரும் நடந்து செல்லும் வழியில், இந்த வெல்லக் கட்டியைத் தின்பது

அபாயம். இந்த வழியில் எல்லாரும் நடந்து போவார்கள். நாம் தின்று கொண்டிருப்பதை யாராவது பார்த்தால் வெல்லக்கட்டியைப் பிடுங்கிக்கொண்டு நம்மை அடித்துத் துரத்தி விடுவார்கள். ஆகையால் இந்த வெல்லக்கட்டியை மறைவான இடத்திற்குக் கொண்டு போனல் இருவரும் சாப்பிடலாம்' என்றது.

3. ஓநாய் நரியைப் பார்த்து, 'நீ சொல்வதுசரிதான்' என்றது. உடனே வெல்லக்கட்டியை ஓநாய் தானே தள்ளிக்கொண்டு போய் ஒரு மறைவான இடத்தில் சேர்த்தது. அந்த வெல்லக் கட்டியைத் தானே அபகரித்துத் தின்ன வேண்டும் என்னும் எண்ணம் ஓநாய்க்கு இருந்தபடியால் அதைத் தெருவினின்றும் மறைவான இடத்திற்குத் தானே சிரமப்பட்டுத் தள்ளிக்கொண்டு போயிற்று. நரியின் உதவியை விரும்பவே யில்லை.

4. வெல்லக்கட்டி மறைவான இடத்திற்குக் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டது. பிறகு, நரி, ஓநாயைப் பார்த்து, 'நாம் கண்டு எடுத்த வெல்லக் கட்டி இருவரும் சாப்பிடுவதற்குப் போதுமான உணவன்று. ஆகையால், அதைப் பாகஞ் செய்யாமலே ஒருவரே தின்பது நலம்' என்று சொல்லியது. ஓநாய் சரியென்று தலையசைத்தது. 'நம் இருவரில் யார் அதைத் தின்-

பது' என்று ஓநாய் கேட்டது. அதற்கு நரி, 'வயதில் மூத்தவர் எவரோ அவரே எல்லாவற்றையும் தின்ன வேண்டியது', என்று சொல்லிற்று. ஓநாய், 'நான் அதற்குச் சம்மதிக்கிறேன்' என்று சொல்லி நரியை எப்படி ஏமாற்றுவது என்று ஆலோசித்தது.

5. ஓநாய் சிறிதுநேரம் பொறுத்து நரியைப்பார்த்து, 'நீ வயதில் முதிர்ந்தவன் வெல்லக் கட்டியைத் தின்னவேண்டும் என்று தீர்மானித்தாய் அல்லவா, நான்தான் வயதில் முதிர்ந்தவன். அதோ தெரிகிறதே அந்த மலையைப் பார்த்தனையா?' என்று கேட்டது. நரி, 'நான் பார்த்திருக்கிறேன்' என்று சொல்லித் தலை யசைத்தது.

6. ஓநாய், 'நான் சிறியவனாயிருக்கும்போது அதோ பெரிதாகக் காணப்படும் மலை சதுப்பு நிலத்தில் சிறிய மணற் குன்றாக இருந்தது. அம்மலைக்குப் பக்கத்திலிருக்கும் பெரிய ஏரியும் மழை ஜலம் தங்கும் ஒரு சிறிய குட்டையாக இருந்தது' என்று சொல்லியது. ஓநாய் சொல்லியதைக் கேட்ட நரி ஓயாமல் சிரித்தது.

7. ஓநாய், 'நண்பனே நீ ஏன் சிரிக்கிறாய்' என்று நரியைக் கேட்டது. நரி, 'நான் எப்படி சிரிக்காமல் இருக்கமுடியும். எனக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு; அதில் இளையவனுடைய

வயதும் உன்னுடைய வயதும் சரியாக இருக்கும்' என்று சொல்லியது. நரி சொல்லியதைக் கேட்ட ஓநாய் அவமானத்தினுல் ஒரு வார்த்தையும் பேசவில்லை. வெல்லக் கட்டியை எல்லாம் நரி தின்னும்படி விட்டு விட்டு ஓடிப் போயிற்று.

## 2. உணவும் சங்கீதமும்

விடா மழை பெய்யும் ஒரு நாளில் பிச்சைக்காரன் ஒருவன் தோலினுற் செய்யப்பட்ட துருத்தி என்னும் வாத்தியத்தை ஊதிக்கொண்டு வீதிவீதியாய்த் திரிந்துகொண் டிருந்தான். யாராவது தனக்குச் சோருவது பணமாவது கொடுப்பார்களா என்னும் எண்ணத்துடன் அவன் விடா மழையிலும் சுற்றிக் கொண்டேயிருந்தான். கடைசியாகப் பணக்காரன் ஒருவன் பிச்சைக்காரனுக்குச் சோறு போடுவதாகச் சொல்லி அவனை வீட்டிக்குள் வரும்படி அழைத்தான். பிச்சைக்காரன் சந்தோஷத்துடன் தன் வாத்தியமாகிய தோல் துருத்தியை வெளியே வைத்துவிட்டு வீட்டுக்குள் சென்முன். சென்றவன் நெடுநேரம் வெளியே வரவில்லை.

2. பசி நோயால் மெலிந்த நரி ஒன்று தனக்கு எங்கேயாவது ஆகாரம் கிடைக்குமா

என்று திரிந்துகொண்டிருந்தது. அது தற்செயலாய்ப் பிச்சைக்காரன் வெளியே வைத்துச் சென்ற தோல் துருத்தியைப் பார்த்தது. அத் துருத்தி மழையில் நனைந்து மிருதுவாயிருந்தமையால், இது, 'நமக்கு நல்ல உணவாகும்' என்று எண்ணிற்று. பிறகு துருத்தியின் அருகே போய் அதைத் தின்ன எண்ணி அதைப் பல்லால் கடித்தது. கடித்த அளவில் தோல் துருத்தியில் காற்று அடைக்கப்பட்டு இருந்தமையால் கிரிச் கிரிச் என்னும் சத்தம் உண்டாயிற்று. நரி நமக்கு, 'உணவும் சங்கீதமும் ஒருங்கே கிடைத்தன' என்று சொல்லிக்கொண்டு சந்தோஷத்துடன் துருத்தியைத் தின்று ஓடிப்போயிற்று. வீட்டுக்குள்ளே சென்ற பிச்சைக்காரன் வெளியே வந்தபோது தன் துருத்தி காணாமைக்காக வருந்தி வீடு சென்றான்.

## 3. நரியும் சேவலும்

மாரிக் காலத்தில் ஒரு நாள் இரவில் நரி ஒன்று இரை தேடுவதற்காக வயல் வெளி எங்கும் திரிந்துகொண்டிருந்தது. அப்போது கொழுத்த பெரிய சேவலொன்று வயிறு நிறையத் தீனியைத் தின்று தள்ளாடி நடந்து தன்

வீட்டுக்குத் திரும்பி வரும்வழியில் நரி சேவலைப் பார்த்தது. நரி திடீரென்று அதன் மேற் பாய்ந்து பிடித்துக் கொண்டது. சேவல் கூச்சலிட்டது. பயிரிடுவோன் சேவலின் கூச்சலைக் கேட்டதும் சேவலை நரி பிடித்துக் கொண்டது என்று தெரிந்து கொண்டான். நரியைப் பிடிக்கும்படி தன் வேலை ஆள்களைக் கூப்பிட்டான்.

2. ஆள்கள் ஓடி வந்தார்கள். இரவு மிகவும் இருட்டாக இருந்தமையால் நரி அவர்கள் கண்ணுக்குப் புலப்படவில்லை. நரி மெதுவாக ஒரு புதருக்குள் நுழைந்து கொண்டது. அங்கேயும் மனிதர்கள் தன்னைத் தேடி வரும் சத்தம் நரிக்குக் கேட்டது. சேவல், தான் கூச்சலிட்டால் நரி தன்னை உடனே கொன்று தின்று விடும் என்பதை நினைத்துக் கூவாமல் வெறுமனே இருந்தது. என்றாலும் நரியின் வாயிலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்வது என்பதை ஆலோசித்துக்கொண்டேயிருந்தது. 'நரியைச் சிறிது வாயைத் திறக்கும்படி செய்வேன் ஆனால் நான் உடனே பறந்து போய் விடுவேன்' என்று சேவல் எண்ணமிட்டது.

3. உழவன் ஆட்கள் நரியைத் தேடும்போது சத்தம்செய்தார்கள். சத்தத்தைக் கேட்டு நாய்கள் குலைக்கத் தொடங்கின. நாய்களின் சத்தத்தைக் கேட்டதும் நரி, தன்னை நாய்கள்

எங்கே கடித்துக் கொன்று விடுமோ என்னும் பயத்தினால் ஓடத் தொடங்கிற்று. சேவல் நரியினிடத்தில், 'ஐயா நீங்கள் இன்னும் சிறிது விரைவாக ஓடவேண்டும். நாங்கள் ஓட்டத்தில் நரிகளைத் தோற்கச் செய்வோம்' என்று நாய்கள் பலதரம் சொல்ல நான் கேட்டிருக்கின்றேன்' என்று சொல்லியது. நரி, 'நாய் என்னைப் பிடிக்கவே முடியாது' என்று சொல்லி வாயைத் திறந்தது. சேவல் உடனே பறந்துபோய் மரத்தின் கிளையில் உட்கார்ந்து கொண்டது.

4. பறந்து போன சேவல் நரியைப் பார்த்து, 'ஐயா, நீங்கள் ஓட்டத்தில் ஐயமடைவீர்கள் என்று நினைக்கிறேன்' என்று சொல்லியது. நரி, 'ஆம், ஆம்' என்று பதில் சொல்லிற்று. சேவல் தன்னை ஏமாற்றியதற்காக நரிக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. நரி, 'அயலார் சொல்லும் இச்சக வார்த்தைகளைக் கேட்பது எப்போதும் பெரிய தவறு. பிறர் சொல்வதைக் கேட்கவே படாது' என்று சொல்லிக்கொண்டே தன்னிடத்திற்கு ஓடிப் போயிற்று.

## 4. அற்புதக் கிணறு

வட இந்தியாவிலுள்ள ஒரு சிறிய ஊரில் வர்த்தகன் ஒருவன் இருந்தான். அவன் பெரிய மாளிகை ஒன்றில் குடியிருந்தான். அம்மாளிகையைச் சுற்றிப் பலவிதமான மரங்கள் நிறைந்த தோட்டம் இருந்தது. அத் தோட்டத்தில் பெரிய கிணறு ஒன்று உண்டு. அக்கிணற்றின் ஜலத்திற்கு அபூர்வமான குணம் உண்டு. அக் கிணற்றின் ஜலத்தை யார் குடிக்கின்றார்களோ அவர்கள் எப்போதும் பொய்யே பேசமாட்டார்கள்.

2. வர்த்தகன் வீட்டில் ஒரு நாள் மோதிரம் ஒன்று காணமற் போயிற்று. வர்த்தகன் தன் வேலையாட்களில் தலைவனை தத்தன் என்பவனை அழைத்து, 'என் மோதிரம் காணமற் போயிற்று. நீ தோட்டத்திற்குப் போய் அற்புதக் கிணற்றிலிருந்து ஒரு தோண்டி நிறையத் தண்ணீர்கொண்டுவா; பிறகு நம்முடைய வேலையாட்களை எல்லாரையும் அழை' என்று கட்டளையிட்டான். தத்தன் விரைவாகச் சென்று பாத்திரம் நிறையத் தண்ணீர் கொண்டு வந்தான். வர்த்தகன் வேலையாட்கள் எல்லாரையும் ஒன்று சேர்த்து ஒவ்வொருவருக்கும் ஒரு செம்பு நிறையத் தண்ணீர் கொடுத்து அவர்களைப் பருகும்படி சொன்னான். வேலையாட்கள்

யாவரும் நீரைப் பருகின பிறகு, 'என்மோதிரம் காணமற் போயிற்று. அதை உங்களில் யாராகிலும் எடுத்தீர்களா ?" என்று ஒவ்வொருவரையும் கேட்டான். எல்லோரும் எடுக்கவேயில்லை என்று சொன்னார்கள். வர்த்தகனுக்கு யாதொன்றும் தோன்றவில்லை வேலையாட்கள் யாவரும் குற்றமில்லாதவர்கள்' என்று தீர்மானித்துக் கொண்டான். அநேக நாட்கள் கழிந்தன. மோதிரம் கிடைக்கவில்லை.

3. வர்த்தகன் ஒரு நாள் தன் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தான். அப்போது தத்தனும் அங்கே தற்செயலாய் வந்தான். வர்ந்தகன், தத்தனைக் கூப்பிட்டு, 'ஏ தத்தா, அதோ காணப்படும் நீண்ட மரத்தின் உச்சியில் பறவைக் கூடு ஒன்று தொங்குகிறது. அந்தக் கூட்டை நீ போய் எடுத்துக் கொண்டுவா' என்று கட்டளை யிட்டான். தத்தன் மரத்தின் மேல் விரைவாக ஏறினன். மரத்தின் உச்சிக்குச் சென்றபோது கிளை முறிந்து அவன் கீழே விழுந்தான். கீழே விழுந்த வேகத்தால் தத்தன் பேச்சு மூச்சு இல்லாமல் சிறிது நேரம் அசைவற்று இருந்தான்.

4. தத்தன் கீழே விழுந்து பேச்சில்லாமல் இருப்பதைக் கண்ட வர்த்தகன் தன் தோட்டத்திலிருக்கும் மாயக் கிணற்றுக்குப் போய்க்

கொண்டுவந்த தண்ணீரைத் தத்தனுக்குக் குடிப்பித்தான். தத்தன் கண் திறந்து பார்த்தான். அவனுக்குப் பழைய ஞாபகம் வந்தது. அவன் வர்த்தகனைப் பார்த்து, 'ஐயா எஜமானரே! என்னை மன்னிக்கும்படி வேண்டுகிறேன். இனி நான் யாதொரு தவறும் செய்யமாட்டேன்' என்றான். வர்த்தகனுக்குத் தத்தன் சொல்லியது ஒன்றும் விளங்கவில்லை. வர்த்தகன் தத்தனைப் பார்த்து, 'நீ சொல்வது யாதும் எனக்கு விளங்கவில்லை' என்றான்.

5. 'தத்தன், ஐயா நான்தான் மோதிரத்தைத் திருடினேன். நீங்கள் மாயக் கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரச் சொன்னபோது நான் வேறு கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தேன். அந்தத் தண்ணீருக்கு உண்மை பேசச் செய்யும் சக்தி இல்லை' என்று சொன்னான். பிறகு தன் தலைப்பாகையில் ஒளித்து வைத்திருந்த மோதிரத்தை எடுத்து வர்த்தகனிடம் கொடுத்தான். வர்த்தகன், 'ஏ தத்தா, உன் குற்றத்தை நான் மன்னித்தேன். என்றாலும் நான் உன்னை என் வேலையாளாக வைத்துக் கொள்ளமாட்டேன். நீ எங்கேயாகிலும் போய்ப் பொய் பேசாமலும் திருடாமலும் நடந்து கொண்டு காலத்தைப் போக்கு' என்றான். தத்தன் அழுதுகொண்டே வீடுபோய்ச் சேர்ந்தான். தன் எஜமானனை மோசஞ் செய்ததற்காக மிகவும் வருத்தப்பட்டான்.

# 5. பூதமும் செம்படவனும்

பூதங்கள் காட்டில் வசிக்கும் என்றும் அவைகளில் பல பணக்கார பூதங்கள் உண்டு என்றும் சொல்வார்கள். அவைகள் தாங்கள் தேடும் பொன் நாணயங்களைப் பூமியின் அடியில் யாவரும் பார்க்க முடியாமல் இருக்கும் குகைகளில் சேர்த்து வைக்கும். பணமில்லாத பூதங்கட்குப் பணக்கார பூதங்கள் உதவி செய்வதும் வழக்கம்.

2. ஒரு நாள் இரவு செம்படவன் ஒருவன் கடற்கரை ஓரமாக நடந்து போனான். அவன் காதில் பூதகணங்கள் பேசும் சத்தம் விழுந்தது. கடற்கரையில் மணல் மேட்டில் படகு ஒன்று இருந்தது. அந்தச் செம்படவன் அந்தப் படகிற்குள் போய்ப் பூதங்கட்குத் தெரியாமல் ஒளித்துக் கொண்டான். பூதங்கள் எல்லாம் படகின் சமீபத்தில் வந்து சேர்ந்தன. ஒரு பூதம் பணமூட்டை ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்து படகோரமாய்ப் போட்டது. பூதங்கள் எல்லாம் படகுக்குச் சமீபமாக உட்கார்ந்தன.

3. பூதங்களில் பெரிய பூதம் பண மூட்டையை அவிழ்த்து, அங்கே ஒன்று சேர்ந்திருக்கும் பூதங்கட்கெல்லாம் பொன் நாணயத்தை வரிசையாகக் கொடுத்தது. படகிற்குள் ஒளித்திருந்த செம்படவனும் தன் கையை

நீட்டினன். அவன் கையிலும் ஒரு நாணயம் விழுந்தது. ஒவ்வொரு பூதத்திற்கும் மூன்று தரம் பெரிய பூதம் நாணயம் கொடுத்தது. தன் கை நிரம்பப் பணம் கிடைத்தவுடன் செம்படவன் மெதுவாகத் தன் கையை உள்ளே இழுத்துக் கொண்டான். பூதங்கள் தன்னை ஒரு வேளை கண்டு பிடித்து விடுமோ என்னும் பயத்தினல் உடனே படகினின்றும் வெளியே வந்து வீட்டுக்குத் திரும்பி ஓடினன்.

4. செம்படவன் வெகு தூரம் சென்ற பிறகு பூதங்கள் அவன் ஓடுவதைப் பார்த்தன. செம்படவன் தங்களை ஏமாற்றியதைப் பூதங்கள் தெரிந்து கொண்டன. உடனே பூதங்கள் அவனைத் துரத்திக்கொண்டு வேகமாய் ஓடின. செம்படவன் அவைகளைவிட அதி வேகமாய் ஓடித் தன் வீட்டுக்குள் நுழைந்தான்.

5. செம்படவன் வீட்டு வாயிற்கதவுகளில் மந்திரத் தகடுகள் வைத்திருந்தமையால் பூதங்கள் வீட்டுக்குள் நுழைவதில்லை என்பது அவனுக்குத் தெரியும். செம்படவன் வீட்டுக்குள் நுழையும்போது பூதங்கள் அவன் மேல் ஆடையை வலுவாகப் பிடித்து இழுத்தன. செம்படவன் மிகவும் சாமர்த்தியமாய் வீட்டுக்குள் நுழைந்து கதவை மூடிவிட்டான்.

அவன் மேலாடை பாதி கிழிந்து விட்டது. அவனிடம் பொன் மிகுதியாக இருந்தமையால் வேறு புதிய மேலாடை ஒன்று வாங்கிக் கொண்டான்.

6. பூதங்கள் தங்களிடத்திற்குத் திரும்பிப் போயின. பூதங்களிடத்தி லிருந்து பெற்றுக்கொண்ட பணத்தினுல் புதிய வீடு ஒன்று கட்டிக்கொண்டு செம்படவன் சுகமாய் வாழ்ந்திருந்தான். பூதங்கள் தன்னைப் பிடித்துக் கொள்ளுமோ என்னும் பயத்தினுல் இரவில் அவன் வெளியே போவதில்லை.

## 6. பூதங்களை ஏமாற்றியது

ஓர் ஊருக்கு வெளியே உள்ள சதுப்பு நிலத்தில் ஒரு பெரிய மாடிவீடு ஒன்று உண்டு. அந்த வீடு ஊருக்கு வெளியே இருந்தமையால் அந்த வீடு அநேக நாட்களில் மனிதர் குடியில்லாமல் வெறுமனே யிருக்கும்; மனித சஞ்சாரம் இல்லாமையால் இரவெல்லாம் பூதங்கள் அந்த வீட்டில் ஒன்று சேர்ந்து கூத்தாடிக் கொண்டிருந்தன.

2. சிலநாள் கழிந்த பின் குடியானவன் ஒருவன் அந்த மாடி வீட்டை வாங்கிக் கொண்டான். அந்த வீட்டில் தன்னுடைய சாமான்-

களை எல்லாம் பரப்பித் தானும் குடி புகுந்தான். வழக்கம்போல வரும் பூதங்கள் அன்று இரவும் வந்து கூத்தாடின. மனிதர் சஞ்சாரமும் வீடு நிரம்ப சாமான்கள் இருப்பதும் பூதங்களுக்கு இடையூருக இருந்தன. பூதங்களின் கூத்தாட்டத்திஞல் உண்டாகும் சத்தத்திஞல் குடியானவனும் அவன் மனைவியும் அன்று இரவெல்லாம் தூங்கவேயில்லை. பூதங்கள் தினந்தோறும் தவருமல் வந்து குடியானவனைச் சங்கடப் படுத்தின.

3. குடியானவன் இந்த உபத்திரவத்தைப் பொறுக்க முடியாமல் தனக்கு அறிமுகமான தள்ளாத கிழவியினிடத்தில் தன் குறைகளைச் சொல்லிக் கொண்டான். கிழவி, 'நீ பூதங்களை முட்டாளாக்க வேண்டும். அப்படிச் செய்வையாயின், அவைகள் மறுபடியும் உன் வீட்டுக்கு வரமாட்டா. பூதங்கள் தங்களைப் பிற பூதங்கள் இகழ்ந்து சிரிப்பதைச் சகிக்கமாட்டா' என்ருள். நீ சொல்லியபடி நடக்க எனக்குச் சம்மதந்தான். என் வீட்டுக்கு வரும் பூதங்களைப் பிற பூதங்கள் பார்த்துச் சிரிக்கும்படி செய்யும் விதம் எப்படி என்பது எனக்குத் தெரியாது' என்ருன்.

4. கிழவி, உன்வீட்டுக்கு வரும் பூதங்கள் எல்லாம் பச்சைமலையி னின்றும் வருகின்றன. பவளமலையில் அனேக பூதங்கள் இருக்கின்றன.

இரண்டு மலைகளிலுள்ள பூதங்கள் ஒன்றுக்-கொன்று சினேகமாக இராது. என்றாலும் ஒன்-றோடொன்று சண்டை யிடுவதில்லை. ஒன்று மற்றொன்றைப் பார்த்துப் பரிகாசஞ் செய்யும்.

**5.** பச்சை மலையினின்றும் என் வீட்டுக்கு வரும் பூதங்களைப் பவழமலையிலிருக்கும் பூதங்-கள் இகழ்ந்து சிரிக்க யான் என்ன செய்யவே-ண்டும் என்று கேட்டான் குடியானவன். கிழவி பச்சைமலைப் பூதங்கள் உன் வீட்டுக்குள் இன்று இரவு வந்து கூத்தாடும் போது நீ வீட்டுக்கு வெளியே போய்ப் பச்சைமலை தீப்பற்றி எரி-கிறது பச்சைமலை தீப்பற்றி எரிகிறது என்று உரத்த சத்தமாய்க் கூப்பிடு, என்றான். குடியா-னவன் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி விட்டான்.

**6.** பச்சை மலையிலிருந்து பூதங்கள் வழக்-கம்போலக் குடியானவன் வீட்டிற்கு வந்து, கூத்தாடிச் சந்தடி செய்யத் தொடங்கின. அந்த வீட்டில் குடியானவன் வாசஞ் செய்வது பூதங்-களுக்கு இடையூறாக இருந்தமையால், அவனை வீட்டைவிட்டுத் துரத்த அவை அன்று மிகுதி-யாகச் சந்தடி செய்தன. குடியானவன் வீட்டுக்கு வெளியே வந்து ‘பச்சைமலை தீப்பற்றி எரி கிறது’ ‘பச்சைமலை தீப்பற்றி எரிகிறது’ என்று உரக்கக் கூவினான்.

7. குடியானவன் கூச்சலைக் கேட்ட பூதங்கள் வீட்டில் கூத்தாடுவதை நிறுத்தி வெளியே ஓடிவந்து அழுதுகொண்டே தங்கள் மலையை நோக்கி ஓட்டம் எடுத்தன. 'எங்கள் குழந்தைகள் எல்லாம் இவ்வளவில் எரிந்து போயினவோ' என்று கூவிக்கொண்டே சில பூதங்கள் ஓடின. சில பூதங்கள் 'விரைவாக ஓடிவாருங்கள், விரைவாக ஓடிவாருங்கள்' என்று சத்தமிட்டன. சில பூதங்கள் மலை தீப்பற்றி எரிகின்றமையால், 'தண்ணீர் கொண்டு வாருங்கள், தண்ணீர் கொண்டு வாருங்கள்' என்று புலம்பின, இவ்வாறு புலம்பிக் கொண்டு பூதங்கள் பச்சைமலையை நோக்கி ஓடின. போனதும் மலை தீப்பற்றி எரிய வில்லை என்பதைத் தெரிந்துகொண்டு தாங்கள் ஏமாறிப் போயினமைக்காக மிகவும் வருந்தின.

8. பச்சைமலைப் பூதங்கள் ஓடுவதைக் கண்ட பவழமலைப் பூதங்கள் அவைகளின் பிறகே சென்றன. பச்சைமலை தீப்பற்றி எரியாமையைக்கண்ட பவழமலைப் பூதங்கள் நகைத்து 'குடியானவன் உங்களை ஏமாற்றி விட்டான் நீங்கள் எல்லாம் முழுமூடர்கள்' என்று உரக்கக் கூவின.

9. பச்சைமலைப் பூதங்கட்கு மிகவும் கோபம் உண்டாயிற்று. அவைகள் ஓடிப்போய்

மலையின் ஒரு பக்கத்தில் மறைந்து கொண்டன. பவளமலைப் பூதங்களால் தாங்கள் எள்ளி நகையாடப் பட்டமையால் பச்சைமலைப் பூதங்கள் திரும்பவும் குடியானவன் வீட்டுக்கு வரவே யில்லை. குடியானவன் சுகமே வாழ்ந்துகொண்டிருந்தான்.

## 7. உலர்ந்த சருகுகள்

நம்மையாளும் ஜியார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் வாழும் இங்கிலந்து தேசத்திலுள்ள ஒரு காட்டில் இரண்டு சிறுமிகள் ஒருநாள் விநோதமாக விளையாடிக்கொண் டிருந்தார்கள். அந்தக் காட்டில் புஷ்பங்கள் மிகுதியாகப் புஷ்பித்து இருந்தன. அவர்கட்கு அங்கே பெரிய வெள்ளைப் புஷ்பம் ஒன்று காணப்பட்டது.

2. சிறுமிகளில் **பெட்டி** என்னும் பெயருடைய ஒருத்தி, 'அதோ காண்கிற புஷ்பத்தைப் பறித்து நான் வீட்டுக்குக் கொண்டுபோகப் போகிறேன்' என்றாள். **கிட்டி** என்னும் பெயருடைய மற்றொரு சிறுமி, 'அந்த அழகுள்ள புஷ்பத்தைப் பறிப்பது வீண்; அது சிறிது நேரத்திற்கெல்லாம் உதிர்ந்து விடும் ஆதலால் அப் புஷ்பம் செடியிலேயே

இருக்கட்டும்' என்றாள். பெட்டி 'நீ புஷ்பத்-தைப் பறிக்க வேண்டாம் என்றால் நான் அதைப் பறிக்கமாட்டேன்' என்றாள்.

3. சில நிமிஷங்கள் கழித்து அந்தப் புஷ்-பத்திலிருந்து உண்டாகும் ஒரு சத்தம் இரண்டு சிறுமிகள் காதிலும் கேட்டது. கிட்டி 'அந்-தச் சத்தம் உனக்குக் கேட்கிறதா' என்றாள். பெட்டி 'அந்தச் சத்தம் தேன் ஈ புஷ்பத்துக்-குள்ளேயிருந்து ரீங்காரம் செய்யும் சத்தமாகும்', என்றாள். கிட்டி, 'அது ஒரு பூதத்தின் சத்தம் என்றாள். பெட்டி, 'ஆனால், நாம் இருவரும் புஷ்பத்தினருகே போய்ப் பார்ப்போம் வா' என்றாள்.

4. பெட்டி, கிட்டி என்னும் சிறுமிகள் இருவரும் புஷ்பத்தின் அருகே போனார்கள். அவர்கள் புஷ்பத்தினருகே போனபோது அந்தப் புஷ்பத்திலிருந்து ஒரு சிறிய பெண் வெளியே வருவதைப் பார்த்தார்கள். அந்தப் பெண் பதுமைபோல் அழகாக இருந்தாள். அவள் கண்கள் நீல நிறமாக இருந்தன. மயிர் பொன்னிறமாக இருந்தது. பளபளவென்று பிரகாசிக்கும் நீண்ட சட்டை ஒன்று உடுத்திக் கொண்டிருந்தாள்.

5. புஷ்பத்திலிருந்து வெளியே வந்த பெண், கிட்டி, பெட்டி என்னும் இரண்டு சிறுமி-

களையும் பார்த்துச் சந்தோஷத்துடன், 'உங்களிருவருக்கும் என் அன்பான வந்தனம், இந்தப் புஷ்பம்தான் வசந்தகாலத்தில் நான் வாசஞ் செய்யும் வீடு, அதை நீங்கள் பறிக்காமல் இருந்தமைக்காக நான் மிகவும் நன்றியுள்ளவளாக இருக்கிறேன். நீங்கள் இருவரும் என்னிடத்தில் பிரியமாக இருந்ததற்காக உங்களிருவருக்கும் வெகுமதி கொடுக்க எண்ணுகிறேன்' என்று சொன்னுள். பிறகு இரண்டு சிறுமிகட்கும் உலர்ந்துபோன சருகுகளைக் கொடுத்து விட்டு அவள் மாயமாய் மறைந்து போனுள். இதற்குள் பொழுதும் சாய்ந்து விட்டமையால் சிறுமிகள் இருவரும் வீட்டுக்குத் திரும்பி வந்தார்கள்.

6. பெட்டி என்பவள், 'பூதம் கொடுத்த சருகுகளை என்ன செய்யப் போகிருய்' என்று கிட்டியைக் கேட்டாள். கிட்டி, 'நான் அந்தச் சருகுகளை பூதத்தினிடத்திலிருந்து பெற்றமையால் அவைகளைச் சேர்த்து வைக்கப் போகிறேன்,' என்றுள். பெட்டி நகைத்து, 'உலர்ந்த சருகுகள் எப்போது வேண்டுமானுலும் எல்லா இடங்களிலும் கிடைக்கும்' என்று சொல்லிச் சருகுகளை எறிந்து விட்டாள். கிட்டி என்பவள் சருகுகளை ஜாக்கிரதையாகப் பெட்டியில் பூட்டி வைத்தாள்.

7. மறுநாள் காலையில் கிட்டி என்பவள் தன் பெட்டியைத் திறந்தாள். தான் வைத்த சருகு-கள் எல்லாம் பொன்னாக மாறியிருப் பதைக்-கண்டு மிகவும் சந்தோஷப் பட்டாள். அவள் தன் தாயாரை அழைத்து, 'இதோ என்னிட-மிருக்கும் பொன் சருகுகளை வந்துபார்' என்று கூச்சலிட்டாள்; கிட்டியின் தாயார் ஓடி வந்து பொன் சருகுகளைப் பார்த்துச் சந்தோஷப்-பட்டு, 'இது உனக்கு எப்படிக் கிடைத்தது' என்று தன் மகளைக் கேட்டாள்.

8. கிட்டி தான் பெட்டியுடன் காட்டுக்குப் போனதும் அங்கே ஒரு பூதத்தைக் கண்டதும் அது தங்கட்கு உலர்ந்த சருகு கொடுத்ததையும் தன் தாய்க்குச் சொன்னாள். தாயார், 'சாதார-ணமாக எல்லாரும் பூதகணங்களைப் பார்க்க முடியாது. நீ அதிர்ஷ்டசாலி யாகையால் நீ பார்த்தாய்; பூதம் உன்னைப் பணக்காரியாக்கி விட்டது. அந்தப் பணத்தைக் கொண்டு நான் உனக்கு நல்ல உடைகள் வாங்கிக் கொடுப்பேன். நமது தலை நகரமாகிய லண்டன் பட்டணத்-திற்கு அழைத்துப் போய் அங்கேயுள்ள விநோதங்களையும் காண்பிப்பேன்' என்றாள்.

9. தன் தாயார் சொல்லியவைகளைக் கேட்டுச் சந்தோஷமடைந்த கிட்டி தன் சினேகிதையாகிய பெட்டியிடம் ஓடிப்போய்ப் பூதம் கொடுத்த சரு-குகள் எல்லாம் பொன் மயமாய் மாறியதைச்

சொன்னாள். பெட்டி நானும் பணக்காரியாக விரும்புகிறேன்' என்று சொல்லித் தான் சருகுகளை எறிந்த இடத்திற்குப் போய் அவைகளைத் தேடினாள். அவைகள் கிடைக்கவில்லை, நான் மறுபடியும் பூதத்தைப் பார்க்கும்போது அவள் கொடுக்கும் சருகுகளை எறிந்து விடாமல் பத்திரமாய் வைத்துக் கொள்வேன்', என்று பெட்டி சொன்னாள். பெட்டி மறுபடியும் பூதத்தைப் பார்க்கவே யில்லை. கிட்டி தனக்குக் கிடைத்த பணத்தை வைத்துக் கொண்டு சுகமாக வாழ்ந்து வந்தாள்.

# 8. அற்புத விளக்கு

பல வருஷங்களுக்கு முன்னர் அரசன் ஒருவன் ஒரு சிறிய நாட்டை அரசாண்டு கொண்டிருந்தான். அந்த நாட்டுக்கு அருகே பெரிய காடு ஒன்றிருந்தது. சூரியன் மறைந்ததும், அந்தக் காட்டிலுள்ள ஓநாய்கள் ஊருக்குள் புகுந்து குடிகளைத் தொந்தரை செய்தன. இதனாலேயே ஜனங்கள் இருட்டினவுடன் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. குடிகள் படும் துன்பத்தை அறிந்த அரசன், இந்த ஓநாய்களின் உபத்திரவத்தை நீக்குபவர்கட்குத் தன் அரசாட்சியில் பாதி கொடுத்துத் தன் குமாரத்தியை

அவர்கட்குக் கல்யாணம் செய்து கொடுப்பதா-
யும் விளம்பரப் படுத்தியிருந்தான்.

2. கண்டோர் யாவரும் பரிகசிக்கத்தக்க தோற்றத்தையுடைய சிறுவன் ஒருவன் அந்த நாட்டின் வீதி வழியாக வந்தான். அவன் தோளின்மேல் தடியொன்றை வைத்திருந்தான். அத்தடியில் லாந்தர் அல்லது விளக்குக்கூடு ஒன்று கட்டித் தொங்கவிட் டிருந்தது. அந்த விளக்குக்குத் தன்னைப் பார்த்தோர் யாவரையும் தன்னருகே இழுக்கும் சக்தியுண்டு. அந்தச் சிறுவன் அரண்மனைக்குப் போய் அரசனைக் கண்டு தான் அந்த ஓநாய்களை எல்லாம் துரத்தி விடுவதாகச் சொன்னான். சிறுவன் சொல்லிய-தைக் கேட்ட அரசன் ‘நீ ஏன் லாந்தர் ஒன்-றைத் தடியில் கட்டித் தொங்கவிட் டிருக்கிறாய்’ என்று கேட்டான். சிறுவன், ‘அரசர் ஏறே, ஓநாய்களைப் பயமுறுத்த இந்த லாந்தரை நான் வைத்துக்கொண் டிருக்கிறேன்’ என்று சொன்னான்.

3. சிறுவன் சொல்லிய பதிலைக்கேட்ட அர-சனும் சபையோர் எல்லோரும் நகைத்தார்கள். சிறுவன் மீது விருப்பம் கொண்ட இராஜ குமாரத்தி ஒருத்தியே நகைக்காம லிருந்தாள்.

4. இராக்காலம் வந்ததும் சிறுவன் காட்-டுக்குள் புகுந்து லாந்தரை முன்னும் பின்னு-

மாகப் பலதரம் அசைத்தான். லாந்தரின் வெளிச்சத்தைப் பார்த்தவுடனே ஓநாய்கள் எல்லாம் அந்த வெளிச்சத்தி னருகே ஓடிவந்தன. அவைகள் சிறுவனுக்கு யாதொரு தீங்கும் செய்யவில்லை. ஓநாய்கள் தன்னை நோக்கி ஓடி வருவதைக் கண்ட சிறுவன் லாந்தரைத் தன் தோளில் வைத்து அசைத்துக் கொண்டு அங்கேயுள்ள ஆற்றில் இறங்கினான். ஓநாய்கள் சிறுவனைப் பின்பற்றிச் சென்றன. விளக்கு வெளிச்சத்தினால் ஓநாய்கள் யாதொன்றையும் கவனியாமல் விளக்கைப் பின்பற்றிச் சென்று ஆற்றில் விழுந்து இறந்தன. ஓநாய்கள் இறந்து போயினமையைக் கேட்ட அந்த நாட்டுக் குடிகளும் அரசனும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். அரசன் தான் சொல்லிய வார்த்தையின்படி நடக்க வில்லை.

5. ஓநாய் உபத்திரவத்தை நீக்கிய சிறுவன், அரசன் தான் சொல்லியபடி நடவாமைக்காக, மனம் வருந்தினான். அரசனுக்கு நற்புத்தி புகட்ட எண்ணினான். மறுநாள் இரவு சிறுவன் தன் வசம் இருக்கும் அற்புத லாந்தருடன் வீதிவீதியாய்த் திரிந்தான். ஒவ்வொரு வீட்டு வாயிலருகே நின்று அந்த லாந்தரின் விளக்கைக் காண்பித்தான். வீட்டில் உள்ள பிள்ளைகள் எல்லாம் வெளியே வந்து சிறுவன் பின்னே சென்றார்கள். தன் பிறகே வந்த

சிறுவர்கட்குச் சிறுவன் விளையாட்டுச் சாமான்களும் தின்பண்டங்களும் கொடுத்துத் தன் வசமாக்கிக் கொண்டான். பெற்றோர்கள் ஓடிவந்து சிறுவர்களை வீட்டுக்கு அழைத்தாலும் அவர்கள் போகவில்லை. குள்ளன்பின் சிறுவர்கள் போவதைக் கண்ட பெற்றோர்கள் அரசனிடம் சென்று முறையிட்டார்கள். அரசன் குள்ளனை அழைத்துத் தன் பெண்ணை அவனுக்கு மணம் செய்வித்தான். தன் அரசாட்சியில் ஒரு பகுதியும் கொடுத்தான். சிறுவன் மணம்புரிந்து கொண்டு சுகமே காலங் கழித்தான்.

## 9. சுண்டெலியும் குடியானவனும்

ஒருநாள் ஒரு குடியானவன் தான் வாசஞ் செய்யும் ஊருக்கு அருகே ஓடும் ஆற்றங்கரையில் மாலைப்பொழுதில் உட்கார்ந்திருந்தான். அவன் ஆற்றில் இறங்கிக் கைகால் சுத்தஞ் செய்து எல்லாம்வல்ல இறைவனை நினைந்து தோத்திரம் செய்வானாயினன். அப்போது ஒரு கழுகு அந்த ஆற்றுக்கு நேரே பறந்து வந்தது. அதன் வாயிலிருந்த உயிர் உள்ள சுண்டெலி ஒன்று தவறித் தண்ணீரில் விழுந்தது. தண்ணீரில் வீழ்ந்து துடிக்கும் சுண்-

JB
0-13(2)
N32

டெலியைப் பார்த்த அக் குடியானவனுக்கு அதன்மீது இரக்கம் உண்டாயிற்று.

2. குடியானவன் உடனே ஆற்றில் இறங்கி அந்தச் சுண்டெலியைத் தண்ணீரிலிருந்து எடுத்துக் கரையின்மேல் விட்டான். அந்தச் சுண்டெலி மிகவும் பயத்துடன் போட்ட இடத்தைவிட்டு நகராமல் அங்கேயே இருந்தது. குடியானவன் அந்தச் சுண்டெலியை வீட்டுக்கு எடுத்துச் சென்று செவ்வையாகக் காப்பாற்றினான். சிலநாள் கழித்துப் பயந்தெளிந்து அச் சுண்டெலி இங்கும் அங்கும் ஓடி விளையாடத் தொடங்கியது. சுண்டெலி ஒருநாள் 'நான் ஒரு மனிதனாக இருந்தால் மற்றைய மிருகங்கள் முதலியன வந்து என்னை வருத்தாமல் இருக்கும்படி தடுத்துக்கொள்ள மாட்டேனா' என்று எண்ணமிட்டது. அது உடனே ஒரு பெண்ணாக மாறியது. அப் பெண்ணின் முகம் மிகவும் அழகுள்ளதாக இருந்தது. கண்கள் கருநிற முள்ளனவாக இருந்தன. பெண் சுறுசுறுப்புள்ளவளாகவும் விளையாட்டுக் குணமுடையவளுமாக இருந்தாள்.

3. குடியானவன் ஒருநாள் அந்தப் பெண்ணைப் பார்த்து, 'எனக்கு வயது முதிர்ந்து விட்டது. கிழத்தன்மை வந்திருக்கிறது. நான்

85396

இறந்தபிறகு உன்னைக் காப்பாற்ற ஒருவரும் இல்லையே ஆகலின் உன் மனத்திற்கு இசைந்த ஒரு கணவனைத் தேடி வருவேன். நீ அவனை மணஞ் செய்து கொள்' என்முன். பெண், 'என்னை மணந்துகொள்ள விரும்புகிறவன் மிக்க பலசாலியாயும், தீரமுள்ளவனும், உழைப்பாளியாயும் இருப்பதோடு என்னை முழுமனதோடும் நேசிக்க வேண்டும்' என்முள். பெண் கூறியதைக் கேட்ட குடியானவன், 'நான் உடனே வெளியே போய் உனக்குத் தகுந்த கணவன் எங்கே கிடைப்பான் என்பதைத் தெரிந்துகொண்டு வருகிறேன்' என்று புறப்பட்டுச் சென்முன்.

4. குடியானவன் பொழுது விடியுமுன்னரே படுக்கையைவிட்டு எழுந்து ஆற்றங் கரைக்குச் சென்று அங்கே உட்கார்ந்திருந்தான். பொழுது விடிந்தது; சூரியன் உதயமானன். குடியானவன் சூரியனைப் பார்த்து, 'ஏ சூரிய பகவானே! நான் ஒரு பெண்ணை வளர்க்கிறேன். அவளைக் காதலித்துக் காப்பாற்றக்கூடிய புருஷனுக்கு மணஞ் செய்துகொடுக்க விரும்புகிறேன். அவன் பலசாலியும், தீரமுள்ளவனும் உழைப்பாளியுமாக இருக்க வேண்டும். உன்னைவிடப் பலவான் உலகத்தில் வேறு யாவரும் இல்லாமையால் தாங்கள் எனக்கு ஒத்தாசை

செய்ய வேண்டுகிறேன்' என்று சொன்னான். சூரியன், குடியானவனைப் பார்த்து, 'என்னை-விடப் பலசாலியை உன் குறையை நீக்கும்படி கேள். என் கிரணங்களை மறைத்து என் அழகைக் கெடுக்கும் மேகத்தைக் கேள்' என்று சொன்னான்.

5. பிறகு குடியானவன் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் மேகங்களைப் பார்த்துத் தான் முன் சூரியனைக் கேட்டபடியே கேட்டான். மேகம் 'குடியானவனே, நான் பலமுள்ளவன், பராக்கிரமசாலி என்று நினைத்துக் கொண்டு என்னை நீ உதவி செய்யும்படி கேட்கின்றாய். நீ நினைக்கிறபடி எனக்கு அவ்வளவு பலமில்லை, என்னைச் சிதறிப் போகச் செய்யும் காற்றைக்கேள்' என்று சொல்லியது.

6. குடியானவன் மேகத்தை விட்டு விட்டுக் காற்றைத் தன் குறையை நீக்குமாறு வேண்டினான். மேகம் தன்னிடம் சொல்லியதையும் காற்றினிடம் சொன்னான். குடியானவன் சொல்லியதைக் கேட்ட காற்று நடுக்கமெய்தி 'நீ எண்ணுகிறபடி எனக்கு அவ்வளவு பலமில்லை. அசைவில்லாமல் ஒரே இடத்தில் நின்றுகொண்டிருக்கும் மலையைக் கேள்.' 'நான் மலையை மோதுவேன் அம் மலை என் மோதலைச் சட்டை செய்வதில்லை' என்றது.

7. குடியானவன் காற்றை விட்டு மலையி-னிடம் போய்த் தன் குறையைச் சொல்லித் தனக்கு உதவி செய்ய வேண்டினன். மலை, 'நண்பனே நீ எண்ணியபடி எனக்கு அவ்-வளவு பலமில்லை. எலியின் வன்மை என் வன்மையை விடப் பெரிது. என்மேல் எல்-லாம் அது வளைகள் தோண்டுகின்றது என்-னுடைய தேகத்திலேயே குடியிருக்கிறது, நான் அதைத் துரத்திப் பிடிக்க முடியாது. அது சுறுசுறுப்பாக ஓடும். நான் இருந்த இடத்தி-லேயே இருக்கவேண்டும்' என்று சொல்லிற்று.

8. குடியானவன் வீட்டிற்குத் திரும்பிவந்து நடந்த விஷயங்களை ஒன்றும் விடாமல் அந்தப் பெண்ணிடம் சொன்னன். அந்தப் பெண் 'மலையைவிட எலிதான் வல்லமையுள்ளது' என்று சொல்லி, நான் மறுபடியும் எலிக்குட்டி-யாக விரும்புகிறேன்' என்று எண்ணினள். உடனே அந்தப் பெண்ணுக்குப் பழைய எலி உருவம் வந்தது. மலையில் வாழும் எலி ஒன்று அதனை மணஞ் செய்து கொண்டது. இரண்டு எலிகளும் சுகமே வாழ்ந்திருந்தன.

# 10. பட்சி ராஜன்

பட்சிகட் கெல்லாம் மிகவும் சிறியது சிட்டுக் குருவி, பட்சிகட்கு அரசன் என்று சொல்லப்படுவது கழுகு என்னும் பறவை. இவ்விரண்டு பட்சிகட்கும் ஒரு நாள் விவாதம் உண்டாயிற்று. சிட்டுக்குருவி, கழுகைப் பார்த்து மரியாதை இல்லாத சில வார்த்தைகள் பேசி, 'நீ ஏன் பட்சி ராஜன் என்று உன்னைச் சொல்லச் சொல்கின்ருய்' என்று கர்வத்துடன் கேட்டது. அற்பப் பிராணியாகிய சிட்டுக்குருவி சொல்லியதைக் கேட்ட கழுகு, 'உலகத்தில் காணப்படும் எல்லாப் பறவைகளைவிட நான் உயரப்பறப்பதினுல் நான் என்னைப் பட்சி ராஜன் என்று சொல்லச் சொல்கிறேன்' என்றது. சிட்டுக் குருவி, 'நீ சொல்வது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது' என்றது. கழுகு, 'ஆனுல் சரி நம்மிருவருடைய வல்லமையையும் இவ்விடத்திலே இப்போது பார்ப்போம்' என்று சொல்லிற்று.

2. சிட்டுக் குருவி ஆகாயத்தில் நேரே பறந்து சென்றது. கழுகு சுற்றிச் சுற்றி வட்டமிட்டுப் பறந்தது. முன்னே பறந்து சென்ற சிட்டுக்குருவி சிறிது நேரத்திற்கெல்லாம் களைப்படைந்து கழுகின் முதுகின்மேல் உட்கார்ந்து கொண்டது. சிட்டுக்குருவி மிகவும் இலேசான

பறவையாகையால் அது கழுகின்மேல் உட்-கார்ந்தது. அது கழுகிற்குத் தெரியவேயில்லை.

3. கழுகு தன்னால் இயன்றவரையில் மேலே பறந்துசென்று களைப்படைந்து விட்-டது. அப்போது கழுகு 'சிட்டுக்குருவியே நீ எங்கே இருக்கிறாய்?' என்று கேட்டது. சிட்டுக்-குருவி கழுகின் முதுகின் மேலே யிருந்து பறந்து, 'நான் உனக்குமேலே பறந்துகொண் டிருக்கிறேன்' என்று சொல்லிற்று.

4. சிட்டுக்குருவி பந்தயத்தில் தந்திரமாக வெற்றியடைந்த படியால் அது தன்னைப் பட்சி ராஜன் என்று சொல்லிக் கொண்டது. கழுகு ஏமாறிப்போயிற்று. பெரியவர்களும் சில சமயங்களில் தந்திரசாலிகளால் தோல்வி யடைகிறார்கள்.

## 11. உபாத்தியாயரை ஏமாற்றிய குரங்கு

குரங்கு ஒன்று ஒருநாள் பாடசாலைக்குள் போய் உபாத்தியாயருடைய சட்டையையும் குல்லா-வையும் போட்டுக் கொண்டது. உபாத்தியாயர் தினந்தோறும் பிள்ளைகட்குப் பாடஞ்சொல்லிக்

கொடுப்பதை அது கவனமாய் கேட்டுக்கொண்டே யிருந்தமையால் அவ்வாறே தானும் செய்யத் துணிந்தது.

2. பாடசாலையில் மணியடித்த வுடன் குரங்கு வகுப்பிற்குள் சென்று உபாத்தியாயர் உட்காரும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டது. சிறிது நேரம்கழித்து உபாத்தியாயர் வகுப்பிற்கு வந்தார். வந்தவர் குரங்கு தன்னுடைய இடத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்துத் தானும் பிள்ளைகளுடன் போய் உட்கார்ந்து கொண்டார். இதைப் பார்த்தவுடன் குரங்குக்கு மிகவும் சந்தோஷமுண்டாயிற்று. தான் உடனே மூக்குக்கண்ணாடியை அணிந்து கொண்டது. பிள்ளைகளைப் பாடங்கேட்கு முன்னமே உபாத்தியாயரைப் பாடங்கேட்டுத் தான் நிரம்பப் புத்திசாலி என்று காட்ட எண்ணியது.

3. குரங்கு உபாத்தியாயரைப் பார்த்து, 'பெரிய மாணுக்கனே நீ எழுந்து நின்று என்னுடைய கேள்விகட்குப் பதில் சொல்'. முதற் கேள்வி 'ஆகாயத்தை எட்டிப்பிடிக்க எத்தனை ஏணி வேண்டும்? இந்தக் கேள்விக்கு நீர் பதில் சொல்வீரா?' என்றது. உபாத்தியாயர், 'நீளமுள்ள ஏணியாக இருந்தால் ஒரு ஏணி போதும்' என்றூர்.

4. உபாத்தியாயர் சொன்ன பதிலைக் கேட்ட அளவில் குரங்குக்கு ஆச்சரியமுண்டாயிற்று. இரண்டாவது கேள்வியாக 'இந்தப் பூமியை எவ்வளவு சீக்கிரத்தில் ஒருவன் சுற்றி வரக்கூடும்? ஆதாரத்துடன் பதில் சொல்ல வேண்டும். இந்தக் கேள்விக்குப் பதில் சொன்னால் உமக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் திறமை உண்டென்று நான் ஒப்புக்கொள்வேன்' என்றது. உபாத்தியாயர் சிறிதும் தாமதமில்லாமல், இருபத்து நான்குமணிநேரத்தில் ஒருவன் பூமியைச் சுற்றிவரலாம். உதாரணமாகப் பூமியைச் சூரியன் ஒருநாளில் சுற்றிவருகிறது யாவர்க்கும் தெரிந்ததே என்றார்.

5. உபாத்தியாயர் கூறிய மறுமொழியைக் கேட்ட மாத்திரத்தில் குரங்கு சிறிதுநேரம் வெறுமனே யிருந்தது. பிறகு நான் கடைசியாக ஒரு கேள்வி கேட்கப்போகிறேன். அது மிகவும் கடினமான கேள்வி. 'என்னுடைய மனத்தில் நான் இப்போது என்ன எண்ணி யிருக்கிறேன்' என்பதைச் சொல்? என்றது. உபாத்தியாயர், இதுமிகவும் சுலபமான கேள்வி. நீ மிகவும் புத்திசாலி என்று எண்ணி இருக்கின்றாய், இங்கேயிருக்கும் எல்லோரும் ஒன்றும் தெரியாத குரங்கு என்று நினைக்கிறார்கள்' என்று பதில் சொன்னார். இதைக் கேட்டதும் குரங்கு அவமான மடைந்து ஓடிப் போய்விட்டது.

# 12. நரியின் தந்திரம்

கோடைக்காலத்தில் ஒரு நாள் ஒரு நரி தன் படுக்கையை விட்டு எழுந்தது. 'இன்றைய-தினம் எனக்குப் பசி மிகவும் அதிகமாக இருக்-கின்றது. ஐயா நான் என்ன செய்வேன், காட்-டில் இருக்கும் மிருகங்கள் எல்லாம் என்னைக் கண்டவுடன் ஓடிப்போய் மறைந்து கொள்-கின்றனவே. நான் யாது செய்யக்கூடும்' என்று நரி தனக்குள்ளேயே எண்ணமிட்டுக் கொண்டு கடற்கழி ஓரமாகச் சென்றது. அந்தக் கழி ஓரத்திலுள்ள நாணற் புல்லின்மேல் ஒரு வாத்து முட்டையிட்டு அதன்மேல் உட்கார்ந்-திருந்தது. அவ் வாத்து சாம்பல் நிறமுள்ளது.

2. அந்த வாத்தைப் பார்த்ததும் நரி 'சாம்பல் நிறமுள்ள வாத்தே! உனக்குக் காலை வந்த-னம்' என்று சொல்லியது. அதற்குப் பதிலாக, 'அற்பகுண முடையவனே நீ இங்கே நிற்கா-மல் ஓடிப்போ. உன்னைப் போன்ற கெட்ட நடக்கை உள்ளவர்களிடத்தில் நான் எப்போ-தும் பேசுகிறதில்லை' என்று வாத்து சொல்லி-யது. இதைக் கேட்ட நரி, 'நான் உன்னுடன் வலியவந்து பேசியதற்காக விசனப்படுகிறேன். இந்த ஏரியின் மற்றக் கரையிலுள்ள வெள்ளை வாத்தின் கதை உனக்குத் தெரியுமா' என்று

நான் கேட்க வந்தேனே தவிர வேறொன்று மில்லை' என்று சொல்லி வீட்டுக்குப் போகும்படி திரும்பியது.

3. 'நரி திரும்பிப் போவதைப் பார்த்த வாத்து, 'ஐயா நரியாரே சற்றே நின்று வெள்ளை வாத்தின் கதையைச் சொல்லுங்கள்' என்று கேட்டது. நரி, 'நான் உரத்த சத்தத்துடன் பேசக்கூடாது. மற்றைய வாத்துகளுக்கு நான் பேசுவது கேட்கப்படாது' என்றது. இதைக் கேட்டவுடன் வாத்து தன் இடத்தை விட்டு நரியின் அருகே வந்தது. வாத்து சமீபத்தில் வருவதைக்கண்ட நரி ஏதோ இரகசியம் சொல்வதுபோல் தன் கழுத்தை நீட்டியது. வாத்து அதைக்கண்டு நரியின் சமீபத்தில் வந்தது. நரி உடனே வாத்தைப் பிடித்துக் கொன்று தின்று விட்டது.

4. நரி வாத்தைக் கொன்று தின்றுவிட்டு ஏரியின் பக்கத்தி லிருக்கும் பள்ளத்தாக்கான நிலங்களண்டை மெதுவாய் நடந்து சென்றது. ஒரு வளையிலிருந்து முயல் வெளியே எட்டிப்பார்த்து, 'ஐயா நரியாரே, காலைவந்தனம்' என்றது. நரி தரையில் படுத்துக்கொண்டு, 'உன் வாய் அசைகிறதை நான் பார்க்கிறபடியால் நீ ஏதோ பேசுகிறதாக மட்டும் தெரிகிறது. எனக்குக் காது செவிடாகையால் நீ சொல்வது

ஒன்றும் கேட்கவில்லை. நான் நிரம்ப முயல்களைத் தின்றபடியால் எனக்குக் காது செவிடு பட்டுப் போயிற்று. நான் இப்போது முயல்களைத் தின்பது இல்லை. முயல்களைத் தின்றால் கண்ணும் குருடாய் விடுமோ என்று பயந்து நான் முயல்களைத் தின்பதை முற்றும் விட்டு விட்டேன்' என்று பதில் சொல்லியது. முயல் வளையை விட்டு வெளியே வந்து, 'நான் உமக்குக் காலை வந்தனம் என்று சொன்னேன் வேறொன்றும் இல்லை' என்றது. நரி, முயலைப் பார்த்து, 'நீ சொல்வது எனக்கு ஒன்றும் கேட்கவேயில்லை. உன்னுடன் சிலநேரம் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்னும் ஆசை எனக்கு இருக்கிறது. நீ இன்னும் உரத்த சத்தத்துடன் பேச வேண்டும்' என்றது. முயல் நரியின் காதின் அருகே சென்று 'காலை வந்தனம்' என்றது. நரி மறுபடியும் முயலைப் பார்த்து, 'நீ என் காதண்டை வந்து பேசுவதில் பயன் இல்லை. என் வாயண்டை வந்து சொன்னால் யான் தெரிந்து கொள்வேன்' என்றது. முயல் நரியின் வாயண்டைப் போய்ப் பேசத் தொடங்கியது. நரி முயலைப் பிடித்துத் தின்றுவிட்டது.

5. வாத்தையும் முயலையும் ஏமாற்றிக் கொன்று தின்ற நரியானது களிப்போடுமாய் மிகவும் சந்தோஷமாக உலாவிக்கொண்டிருந்தது.

'எனக்கு நல்ல காலைப் போஜனம் கிடைத்தது. நான் தடித்துப் பருமனாக இருக்கிறேன் நான் இப்போது வெடி குண்டு பாய்வதற்கு ஏற்ற ஒரு கேடயம்போல் இருக்கிறேன்' என்று சொல்லிக்கொண்டு உலாவிக்கொண் டிருந்தது. அங்கே புதரில் மறைந்திருந்த வேடன் ஒருவன் நரி சொல்வதைக் கேட்டுத் தன் துப்பாக்கியை எடுத்து ஒரு குண்டைப் பாய்ச்சினான். அந்தக் குண்டு நரியின்மேல் பாய்ந்து மரண காயம் உண்டாக்கியது. கீழே விழும் நரி, 'ஐயா இந்த உலகம் வெகு விநோதமாக இருக்கிறது. விளையாட்டாக எவரும் எதையும் பேசக்கூடாது போலும் அது வினையாகவே முடிகிறது' என்று சொல்லிக்கொண்டே இறந்துபட்டது.

## 13. ஆட்டுத்தோல் போர்த்த ஓநாய்

ஆடுகளைக் கொன்று அவைகளின் மாமிசங்களைத் தின்பதிலேயே மிகவும் பிரியமுள்ள ஓநாய் ஒன்று இருந்தது. அது சமயம் நேரிடும்போதெல்லாம் ஆட்டு மந்தையின் மேல் பாய்ந்து ஆடுகளைக் கொன்று தின்னும். இதைத் தெரிந்துகொண்ட இடையர்கள் தங்கள் ஆட்டு மந்தையை வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வந்தார்கள். மந்தைகட்குக் காவ-

லாக நாய்களையும் வளர்த்தார்கள். ஓநாய் மந்தையண்டை வரும்போது நாய் குலைக்கும். நாய் குலைப்பதைக் கேட்ட இடையர்கள் ஓடி வருவார்கள், ஓநாய் பயந்து ஓடிவிடும்.

2. திருட்டுக் குணமுள்ள ஓநாய் ஒரு ஆட்டின் தோல் உலர வைத்திருப்பதைப் பார்த்தது. அதன் அருகே போய் அதை இழுத்துத் தன் தேகம் முழுவதும் போர்த்துக்கொண்டது. இதனால் ஓநாய் ஆடுபோலவே பார்ப்போர் கண்ணுக்குத் தோன்றியது. ஓநாய் மெல்லென ஆட்டுமந்தையில் போய்ச் சேர்ந்தது. ஆடுகள் தழை மேய்வதைக்கண்டு தானும் தழை மேய்வதுபோலப் பாசாங்கு செய்தது. எந்த ஆட்டின் தோலை ஓநாய் போர்த்துக்கொண்டதோ அந்த ஆட்டின் குட்டிகள் ஓநாயைத் தம் தாயார் என்று எண்ணி அதனருகே வந்தன. ஓநாய் தந்திரமாக மந்தையினின்றும் வெளியே வந்தது. குட்டிகளும் அதன் பிறகே சென்றன. ஓநாய் ஆட்டுக் குட்டிகளைத் தனிமையான இடத்திற்கு அழைத்துச் சென்று அவைகளைக் கொன்று தின்றது. சில காலம் ஓநாய் ஆட்டுத் தோலைப் போர்த்துக்கொண்டு ஆடுகளைக் கொன்று தின்று இருந்தது. இடையர்கள் இத்தத் திருட்டைக் கண்டு பிடித்து ஓநாயைக் கொன்று விட்டார்கள்.

# 14. பாழடைந்த கோபுரம்

தன் ஆயுள் முழுவதும் பட்டணவாசத்திலேயே காலங் கழித்து வந்த கனவான் ஒருவர் தற்செயலாய் நாட்டுப் புறத்திலுள்ள ஓர் ஊருக்குப் போக நேர்ந்தது. அவர் தாம் வசிக்கும் பட்டணத்திற்கு நெடுந்தூரத்திலுள்ள 'கார்கல்' என்னும் ஊருக்குப் போய் அன்று மாலையே தம் வீட்டிற்குத் திரும்பி வரலாம் என்னும் எண்ணத்துடன் போனார். தான் எண்ணிக்கொண்டு போன காரியம் முடிவு பெருமையால் அன்று இரவு அந்த ஊரில் தங்கும்படி நேர்ந்தது.

2. கனவான் ஊருக்கு வெளியே உள்ள ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தார். அன்று இரவு சத்திரத்திலேயே இராப் போஜனத்தை முடித்துக் கொண்டார். இரவில் போஜனம் உண்ட வுடன் சிறிது நேரம் வெளியே சென்று உலாவி வருவது அவருடைய வழக்கம். அவர் சத்திரக்காரனைப் பார்த்து, 'சற்றுநேரம் உலாவிவர எங்கே போகலாம்' என்று கேட்டார். சத்திரக்காரன், 'ஐயா, அதோ காணப்படும் உயர்ந்த கோபுரமுடைய அரண்மனையைத் தாங்கள் சுற்றி வரலாம் அந்தக் கோபுரமும் அரண்மனையும் இரவில் வெகு அழகாகக் காணப்படும்' என்று

பதில் சொன்னான். கனவான் அப்படியே கோபுரத்தைச் சார்ந்து அது பாழ் அடைந்த நிலைமையில் இருப்பதைக் கவனமாய்ப் பார்த்துக்கொண் டிருந்தார்.

3. கனவான் கோபுரத்தைக் கவனமாய்ப் பார்த்துக்கொண் டிருக்கும்போது அவர் என்றும் கேட்டிராத சத்தம் ஒன்று அவர் காதிற் பட்டது. அதைக் கேட்ட அளவில் அவருக்கு நடுக்கம் உண்டாய் உடம்பெல்லாம் வியர்த்து, மூர்ச்சித்துச் சிறிது நேரம் அசையாமல் இருந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் வேறுவிதமான சத்தம் ஒன்று உண்டாயிற்று. அதைக் கேட்டதும் திடுக்கிட்டு, தான் தங்கியிருக்கும் சத்திரத்திற்கு ஓடி வந்தார். அந்த அரண்மனையிலும் கோபுரத்திலும் பிசாசுகள் குடியிருக்கின்றன என்றும் அவைகள் தாம் அவ்வாறு சத்தம் செய்தன என்றும் கனவான் அபிப்பிராயப்பட்டார். மறுநாள் தம் வீட்டிற்குத் திரும்பிவிட்டார்.

4. சமாசாரப் பத்திரிகைகட்கு விஷயங்கள் வழக்கமாய் எழுதி வரும் சிறுவன் ஒருவன் இந்தக் கனவானை வழியில் சந்தித்தான். கனவான் தான் நேற்று கார்கல் என்னும் ஊருக்குப் போயினமையும் அங்கே அரண்மனையைத் தான் பார்க்கச் சென்றமையும் சொன்னார்.

அரண்மனையிலிருந்து பூதங்கள் சத்தமிட்டதை-யும் சொல்ல மறக்கவில்லை. கனவான் சொல்-லிய அனைத்தையும் கேட்ட சிறுவன் அவர் சொல்லிய விஷயங்களை எல்லாம் விரிவாக எழுதிச் சமாசாரப் பத்திரிகைக்குப் பிரசுரம் செய்ய அனுப்பிவிட்டான்.

5. மறுநாள் சமாசாரப் பத்திரிகையில் விஷயம் வெளியாயிற்று. அதை வாசித்தோ-ரில் பலர் அந்த அரண்மனையையும் கோபு-ரத்தையும் நேரில் பார்க்க விரும்பினார்கள். பலர் கார்கல்லுக்கு வந்து அந்தப் பாழடைந்த அரண்மனையையும் கோபுரத்தையும் பார்த்துச் சென்றார்கள். திரள் திரளாய் ஜனங்கள் வந்த-மையால் கனவான் தங்கியிருந்த சத்திரக்கார-னுக்கு மிக்க வருமானம் கிடைத்தது. அரண்-மனையைப் பார்க்க வந்தவர்களுட் சிலர் 'பூதம் அல்லது பிசாசு இந்த அரண்மனையில் இருக்-கிறது என்பது பொய், இங்கே உண்டாகும் சத்தம் ஆந்தை கூச்சலிடும் சத்தமேயொழிய வேறொன்றும் இல்லை' என்றார்கள்.

6. பலர் பிசாசு தான் சத்தமிடுகின்றது என்றார்கள். உண்மை எதுவென்று ஆராய்ந்து பார்க்கும்போது செடிமறைவில் பகல் எல்லாம் மறைந்திருந்த ஆண் ஆந்தை பொழுது சாய்ந்-ததும் இரவில் வெளியேபோகத் தனக்குத்

துணையாகவரும்படி தன் பெண் ஆந்தையை அழைக்கும் சத்தம் என்று தெரிய வந்தது. சில காலம் கழிந்தபிறகு அந்த அரண்மனையை இடித்துப் புதிய மாளிகையாகக் கட்டி அதில் கனவான்கள் குடிபுகுந்தார்கள். ஆந்தையின் சத்தம் கேட்பதேயில்லை.

## 15. கர்வங்கொண்ட பூனை

நாம் வாசஞ் செய்யும் ஆசியா கண்டத்தின் ஒரு பாகமாகிய பெர்ஸியா தேசத்தில் அநேக பணக்காரர்கள் வாசஞ் செய்திருந்தார்கள். அவர்கள் எல்லாம் மகம்மதிய மதத்தைச் சார்ந்தவர்கள். கனவான்களில் ஒருவர் பூனை ஒன்றை வளர்த்து வந்தார். அந்தப் பூனை மிகவும் அழகாக இருந்தது. அப் பூனைக்கு 'நாம் மிக அழகாக இருக்கின்றோம்' என்பது நன்றாகத் தெரியும். தன்னைவிட வேறு அழகான பூனை உலகத்திலே கிடையாது என்று எண்ணி அது மிகவும் கர்வங்கொண் டிருந்தது.

2. பூனையை வளர்க்கும் மகம்மதிய கனவானுக்கு 'எல்லா' என்னும் பெயருடைய குமாரத்தி ஒருத்தி இருந்தாள். அந்தப் பெண் இந்தப் பூனையை மிக அருமையாக வளர்த்து வந்தாள். அந்தப் பூனைக்கு காலந்தவறாமல்

பால் ஏடு முதலிய தின்பண்டங்கள் கொண்டு-போய்க் கொடுப்பாள். அந்தப் பூனை வெளியே எங்கும் போவதில்லை. கனவானுடைய வீட்-டுக்கு அருகே ஒரு பெரிய தோட்டம் ஒன்று உண்டு. அந்தத் தோட்டத்தில் பெரிய பலகை ஒன்று போடப்பட் டிருந்தது. இந்தப் பூனை அந்தப் பலகையின்மேல் எப்போதும் படுத்-துத் தூங்கிக்கொண் டிருக்கும். எல்லா என்-பவள் தான் பாடசாலைக்குப் போகும் நேரம் தவிர மற்றைய நேரங்களில் பூனையுடன் விளை-யாடிக்கொண்டு இருப்பாள். எல்லா அந்தப் பூனையை 'கறீம்' என்று அழைப்பாள்.

3. கொடுமையான வெய்யில் காயும் ஒரு தினத்தில் பூனைவழக்கம்போல் தூங்கிக்கொண்-டிருந்தது. திடீரென்று ஒரு சத்தம் உண்டா-யிற்று. அதைக் கேட்டுப் பூனை விழித்துக் கொண்டது. விழித்துக்கொண்ட பூனை சத்-தம் எங்கே இருந்து உண்டாயிற்று என்று யோசித்தது. தங்கள் பங்களாவிற்கு எதிர் வீட்-டில் இருக்கும் ஒரு காட்டுப் பூனை தோட்டத்-துக்குள் ஓடி வந்த சத்தம் என்று தெரிய வந்-தது. தோட்டக்காரன் உடனே வந்து காட்டுப் பூனையைத் துரத்தி விட்டான்.

4. வேறொருநாள் கறீம் அந்தத் தோட்-டத்தில் உள்ள குளக்கரையில் படுத்துத் தூங்-

கிக்கொண் டிருந்தது. அன்றைய தினமும் காட்டுப் பூனை வந்து சத்தம் செய்தது. கறீம் விழித்துக்கொண்டு அந்தக் காட்டுப் பூனையை வெறுப்புடன் பார்த்தது. காட்டுப் பூனை கறீம் என்னும் பூனையைப் பார்த்து, 'ஏ ஒன்றுக்கும் பற்றாத சோம்பேறிப் பூனையே, உலகத்தில் உன்னால் யாருக்கு என்ன பிரயோஜனம். நீ எலிகளைப் பிடிப்பதும் இல்லை. உனக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொள்ளும் சக்தியும் கிடையாது. உனக்கு வெட்க மில்லையா ?' என்று கேட்டது. காட்டுப் பூனை சொல்லிய இழிவான சொல்லைக்கேட்ட கறீமுக்கு அதிக வருத்தமும் கோபமும் உண்டாயிற்று. அது காட்டுப் பூனையைப் பார்த்து, ' இழிந்த அற்பமான பூனையே. என் வீட்டுக்குள் நீ வந்து என்னை இகழ்ந்து பேசும்படியான கர்வம் உனக்கு எப்படி உண்டாயிற்று' என்று சொல்லி அதைத் துரத்தும்படி சிறிது பின் வாங்கியது. அப்போது கறீம் தவறிக் குளத்தில் விழுந்தது. அந்தக் குளத்தில் நிரம்பத் தண்ணீர் இல்லாமையால் கறீம் அதில் அமிழ்ந்து போகவில்லை.

5. குளத்தில் விழுந்து வருந்தும் கறீமைப்பார்த்த காட்டுப் பூனை அதை ஏளனஞ் செய்தது. 'உன் கர்வத்திற்கு ஏற்ற பலன் உனக்குக் கிடைத்தது' என்று சொல்லிற்று.

பிறகு கறீம் படும் துன்பத்திற்காக வருந்தி அந்தத் தோட்டத்தில் உள்ள சமையல் வீட்-டண்டை போய்ச் சந்தடி செய்த பூனையின் சத்தத்தைக் கேட்ட சமையற்காரன் வெளியே வந்தான். அப்போது கறீம் குளத்தில் விழுந்து கூச்சலிடும் சத்தம் அவன் காதுக்கு எட்டியது, அவன் ஓடிப்போய் கறீமைக் குளத்தினின்றும் எடுத்துக் கரைமேல் விட்டான். அன்று முதல் கறீம் தன் கர்வத்தை விட்டுக் கீழ்ப்படிந்து நடந்தது. காட்டுப்பூனை தன் வீட்டிற்கு ஓடிப் போய் விட்டது.

TB
O-3(2)
N32
85396

Printed at the 'Caxton Press,' Madras — 1932 (A)

1283

Caxton Press
MADRAS